[1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மோட்டார் ஆக்ஸிடன்ட்க்ளைம் டிரிபியூனலைப் பொறுத்தவரையில் தனியார் வாகனங்களில் விபத்து ஏற்பட்டால் ஒரு தொகையும், அரசாங்க வாகனங்களாக இருந்தால் ஒரு தொகையும் கொடுக்கவேண்டும் என்ற பாகுபாடு கிடையாது. எல்லா வாகனங்களுக்கும் ஒரே அளவில் தான் நஷ்ட ஈட்டுத் தொகை அளிக்கப்படுகிறது.

திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனை.

* வினா எண். 437—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்காட்டுப் பள்ளி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவு படுத்துகிற திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நெடுங்காலமாக திருக்காட்டுப்பள்ளி மருத்துவ மனையில் போதிய அளவுக்கு விஸ்தரிப்பு இல்லாதிருப்பதின் காரணமாக அங்குள்ள ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து இந்த மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது அந்த மருத்துவ மனையில் 26 படுக்கைகள் உள்ளன. அதில் எட்டு ஆண் நோயாளிகளுக்கான படுக்கைகளும், 18 பெண் நோயாளிகளுக்கான படுக்கைகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற ஆய்வு கூடங்கள் அங்கு இல்லை. 1974–75–76 ஆம் ஆண்டுகளில் உள்ள நிலைமைப்படி, அங்கே உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்கள் முறையே 28, 26, 29 என்றும், புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை முறையே 255, 300, 345 என்றும் இருக்கின்றன. ஆகவே இப்போதிருக்கின்ற படுக்கைகள் போதுமானவையாக இருக்கின்றன என்று அங்குள்ள மாவட்ட மருத்துவ அதிகாரியின் கணிப்பாகும். அதோடு மட்டுமல்லாமல், அங்கிருந்து அருகிலுள்ள தஞ்சையில் ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலும் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் பல்வேறு நவீன தீவிர மருத்துவ வசதிகள் இருக்கின்றன. ஆகவே தற்போது திருக்காட்டுப்பள்ளியில் உள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.